بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 21/08/2026 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

## நன்றியுணர்வு தொடர்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களின் செயல் முன்மாதிரி

أَشْهَدُ أَنْ لَّآ إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿۱﴾ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ﴿۲﴾ اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿۳﴾ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ﴿۴﴾ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ﴿۵﴾ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ﴿۷﴾

ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் தமது தோழர்களுக்கு இறைவனின் அருட்கொடைகளுக்கு நன்றி செலுத்துவதன் பக்கம் மிகவும் ஆழமாக கவனமூட்டி வந்தார்கள். **ஹஸ்ரத் பீர் ஸிராஜுல் ஹக் சாஹிப் நுஃமானி (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:** ஒருமுறை ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் என்னிடம், மியா(ன்) பக்ஷ் சவ்தாயி سودائی என்பவருடன் நடந்த சர்ச்சையின் நிலவரத்தைக் கேட்டறிந்தார்கள். அதற்குப் பிறகு அன்னார் அறிவுரை கூறும்போது, "சவ்தாயி, புத்திசுவாதீனமற்ற, கேள்வி கணக்கு கேட்கப்படாத நிலையைச் சேர்ந்தவர் ஆவார். எனவே, இத்தகைய மனிதரிடம் விவாதிப்பதையோ அல்லது சண்டையிடுவதையோ விடுத்து அவருடன் அழகிய முறையில் நடந்துகொள்ள வேண்டும். உலகம் இத்தகையவர்களை இறை அன்பில் ஆழ்ந்தவர் என்றும், இறைநேசர் என்றும், இறைப்பணியில் உள்ளவர் என்றும் கூறுகிறது. ஆனால் உலகம் கூறுவது தவறாகும். உண்மையில் இவர்கள் பல அருட்கொடைகளிலிருந்து இழப்பிற்கு ஆளானவர்கள் ஆவர். அவர்கள் பகுத்தறிவு, சிந்திக்கும் திறன், ஆடை, உணவு பானங்களின் சுவை, மனைவி மக்கள் மற்றும் அவர்களைப் பராமரிப்பதால் கிடைக்கும் அருட்கொடைகள், அல்லாஹ்வைப் பற்றிய அறிவிலிருந்தும் புரிதலிலிருந்தும், அவனது இருப்பு மற்றும் பண்புகளின் ஞானத்திலிருந்தும், இறைத்தூதர் மற்றும் நபியின் கண்ணியத்திலிருந்தும், அவர்களைப் பின்பற்றுவதிலிருந்தும், திருக்குர்ஆனைத் திலாவத் செய்வதிலிருந்தும், அதன் பொருள், இரகசியங்கள், ஞானங்கள் மற்றும் நுட்பங்களிலிருந்தும், ஷரீஅத் மற்றும் தரீகத் (ஆன்மிக வழியி)லிருந்தும், தொழுகை, நோன்பு, ஹஜ் மற்றும் ஸகாத் ஆகியவற்றின் மூலம் கிடைக்கும் நற்கூலிகள் மற்றும் பதவிகளிலிருந்தும் இவர்கள் இழப்பிற்கு ஆளானவர்கள் ஆவர்" என்று கூறினார்கள்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறினார்கள்**: "இத்தகைய மனிதர்களைக் காணும்போது அவர்களுடன் விவாதிப்பதைத் தவிர்த்து, அல்லாஹ் நம்மை இத்தகைய அருட்கொடைகளிலிருந்து இழப்பிற்காளானவர்களாக ஆக்கவில்லையே என்று அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்த வேண்டும். அவன் நமக்குச் சிந்திக்கும் திறனையும் அறிவையும் வழங்கி, திருக்குர்ஆனைத் திலாவத் செய்வதற்கும், அதன் அறிவு, ஞானங்கள், இரகசியங்கள் மற்றும் நுட்பங்களைப் புரிந்துகொள்வதற்கும் வாய்ப்பளித்துள்ளான்; ஹலால் மற்றும் ஹராம் ஆகியவற்றை வேறுபடுத்தி அறியும் அறிவை வழங்கியுள்ளான்; தூதர்களைப் புரிந்துகொள்ளும் நல்வாய்ப்பை

வழங்கியுள்ளான்; தனது இருப்பு மற்றும் பண்புகளைப் பற்றிய அறிவை வழங்கியுள்ளான் என்று கூறினார்கள்."

எனவே ஒவ்வோர் அஹ்மதியும், அவர் எந்தளவுக்கு அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தும் உரிமையை நிறைவேற்றி வருகிறார் என்பதைச் சுயபரிசோதனை செய்து கொள்ள வேண்டும்.

**இத்தகைய நன்றியுணர்வைப் பற்றிய மிகவும் தாக்கம் நிறைந்த ஒரு சம்பவத்தை ஹஸ்ரத் மலிக் முஹம்மது ஹஸன் முஹம்மது சாஹிப் அவர்கள் எடுத்துரைக்கிறார்கள்**: "ஹுஸூர் (அலை) அவர்கள் ஃபஜ்ர் தொழுகைக்காக வருகை தந்தார்கள். தொழுகைக்குப் பிறகு தொண்டர்களைப் பார்த்து, இரவில் சாரங்கி மற்றும் தம்பூரா இசைக் கருவிகள் எங்கே ஒலித்துக் கொண்டிருந்தன என்று கேட்டார்கள். அதற்கு, மிர்ஸா நிஸாமுத்தீன் சாஹிப் ஒரு நாட்டியப் பெண்ணை அழைத்திருந்தார்; அவளுக்கு இரவுக்கு இருபது ரூபாய் தருவதாக வாக்குறுதி அளிக்கப்பட்டிருந்தது. அதனால் அவள் இரவு முழுவதும் நடனமாடி பாடிக் கொண்டிருந்தாள் என்று கூறப்பட்டது. அதைக் கேட்ட ஹுஸூர் அவர்கள் ஒரு நீண்ட பெருமூச்சு விட்டு, அல்லாஹ்வே! இந்தப் பெண் எந்த அளவு நன்றியுணர்வு கொண்டவளாக இருக்கிறாள் என்று கூறினார்கள். அதாவது, அந்தப் பெண் இருபது ரூபாய்க்காக இரவு முழுவதும் விழித்திருந்தாள்; ஆனால், நமக்கு எண்ணற்ற அருட்கொடைகளை வழங்கிப் பயனடையச் செய்துள்ள நமது உண்மையான படைப்பாளனுக்காகவும் அதிபதிக்காகவும் நம்மால் ஓரிரு மணிநேரம் கூட விழித்திருக்க முடிவதில்லையே என்று கூறினார்கள். அன்னார் இந்த வாக்கியத்தை பல முறை திரும்பத் திரும்பக் கூறியதோடு, அல்லாஹ் வழங்கியுள்ள எண்ணற்ற அருட்கொடைகளுக்கு நாம் நன்றியும் செலுத்துவதில்லை; நஃபில் தொழுகைகள் மற்றும் ஏனைய தொழுகைகளின் பக்கமும் கவனம் செலுத்துவதில்லை; ஃபஜ்ர் தொழுகைக்கு எழுவது கூட நமக்குக் கடினமாகிவிடுகிறது என்று கூறினார்கள்."

எனவே, ஒவ்வோர் அஹ்மதியும் இந்த விஷயத்தில் தன்னைத்தானே சுயபரிசோதனை செய்து கொள்ள வேண்டும்; நாம் எந்தளவுக்கு அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தும் உரிமையை நிறைவேற்றி வருகிறோம் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

**ஹஸ்ரத் ஷேக் முஹம்மது இஸ்மாயீல் சாஹிப் ஸர்தாவி** (سرداوی) **அவர்கள் கூறுகிறார்கள்**: "ஹுஸூர் (அலை) அவர்கள் உணவு உண்ணும்போது சுப்ஹானல்லாஹ், அல்ஹம்துலில்லாஹ் என்று கூறும் வழக்கம் உடையவர்களாக இருந்தார்கள். மேலும், ஏதோ ஒரு பொருளைத் தேடுபவரைப் போன்று உணவை உண்பார்கள்."

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களும் (இது தொடர்பாக) கூறுகிறார்கள்**: "ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ரொட்டியின் மிகச்சிறிய துண்டை வாயில் போட்டு நன்றாக மென்று கொண்டே இருப்பார்கள்; பெரிய கவளமாக உட்கொள்ள மாட்டார்கள். அதேநேரத்தில் சுப்ஹானல்லாஹ், சுப்ஹானல்லாஹ் என்றும் கூறிக்கொண்டே இருப்பார்கள். பின்னர் சிறிது நேரத்திற்குப் பிறகு அதிலிருந்து ஒரு துண்டை குழம்பில் தொட்டு உண்பார்கள்."

இவ்வாறு, உணவருந்துவது போன்ற சாதாரணமானதாகத் தோன்றும் அருட்கொடையிலும் அன்னார் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துவது வெளிப்படையாகத் தெரிந்தது.

**ஹஸ்ரத் ஸய்யித் ஸைனுல் ஆபிதீன் வலியுல்லாஹ் ஷாஹ் சாஹிப் அவர்கள் கூறுகிறார்கள்**: "ஒரு பகுதியிலோ அல்லது நகரத்திலோ பிளேக் நோய் பரவத் தொடங்கியபோது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தம் வீடு, விடுதி மற்றும்

அனைத்து நண்பர்களின் வீடுகளையும் தூய்மைப்படுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்தார்கள். மேலும் கந்தகம், நெருப்பு, பினாயில் மற்றும் குங்குலியம் (அதாவது, மரப் பிசின்) ஆகியவற்றைக் கொண்டு கிருமிகளை அழிக்குமாறு வலியுறுத்தினார்கள்."

**அன்னார் கூறுகிறார்கள்**: "காரணிகளைப் பயன்படுத்துவதும் அல்லாஹ்வின் அருட்கொடைக்கு நன்றி செலுத்துவதாகும். நோய்கள் மற்றும் கொள்ளைநோய்களின் பாதிப்புகளை நீக்குவதற்கான வழிமுறைகளாக அமையும் பொருள்களையும் அல்லாஹ் படைத்துள்ளான். எனவே, காரணிகளைப் புறக்கணிப்பது இறை ஷரீஅத்திற்கு எதிரானது ஆகும். ஆனால், தவக்கலின் (இறை நம்பிக்கையின்) நிலை இதற்கு அடுத்தபடியாகும்; அதாவது, காரணிகளைப் பயன்படுத்திய பிறகு அவற்றின் மீது மட்டுமே நம்பிக்கை வைக்காமல் காரணிகளுக்குப் பின்னால் உள்ள இறைவனின் கரத்தைக் காண வேண்டும்."

**ஹஸ்ரத் முஹம்மது இப்ராஹீம் சாஹிப் அவர்கள் ஒரு சம்பவத்தைக் கூறுகிறார்கள்**: "1904 ஆம் ஆண்டு குர்தாஸ்பூரில் கரம்தீன் வழக்கு நிமித்தமாகத் தங்கியிருந்தபோது, ஒரு நண்பர் புதிதாகப் பறிக்கப்பட்ட பேரீச்சம்பழங்களைக் கொண்டுவந்தார். சிலர் அவை உடலுக்குச்சூடு என்று கூறியபோது, வெங்காயத்தை உண்பதால் அதன் தாக்கம் நீங்கிவிடும் என்று கூறப்பட்டது. அதற்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள், அல்லாஹ் எத்துணை அழகாக ஏற்பாடு செய்துள்ளான் எனில், ஒவ்வொரு பொருளையும் சீர் செய்வதற்கு இன்னொரு பொருளையும் அவன் படைத்துள்ளான் என்று கூறினார்கள்."

அன்னார், மாம்பழம் - நாவல்பழம், வாழைப்பழம் - அரிசி ஆகியவற்றை உதாரணங்களாகக் குறிப்பிட்டார்கள். அதற்குப் பிறகு, மனிதனுக்காக அல்லாஹ் செய்துள்ள ஆன்மிக மற்றும் பௌதிக ரீதியான மேலான ஏற்பாடுகளைப் பற்றிக் குறிப்பிட்டு, மனிதனால் இதற்கு நன்றியும் செலுத்த முடியாது என்று கூறினார்கள்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் நோயிலிருந்து நிவாரணம் பெற்றபோதும் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தினார்கள். தஸ்கிரத்துஷ் ஷஹாதத்தைன் எனும் நூலை எழுதும்போது** அன்னாருக்குக் கடுமையான சிறுநீரக வலி ஏற்பட்டது. இந்த எழுத்துப் பணியை நிறைவு செய்ய முடியாமற்போய் விடுமோ என்றும் அன்னார் நினைத்தார்கள். அன்னார், இரவில் குடும்பத்தினரை ஒன்றுதிரட்டி துஆ செய்தார்கள்; மேலும் மர்ஹூம் சாஹிப்ஸாதா மவ்லவி அப்துல் லதீஃப் சாஹிப் அவர்களின் நினைவோடு, அல்லாஹ் இந்நூலை நிறைவுசெய்ய நல்வாய்ப்பளிக்க வேண்டும் என்று துஆ செய்தார்கள். துஆவுக்குப் பிறகு அன்னாருக்கு ஒருவித மயக்கநிலை ஏற்பட்டு, سَلَٰمٌ قَوۡلًا مِّن رَّبٍّ رَّحِيمٍ (ஸலாம் - இது, மேன்மேலும் கருணைகாட்டுபவனாகிய இறைவனிடமிருந்து வந்துள்ள வாழ்த்து ஆகும்) என்ற இல்ஹாம் இறங்கியது. காலை ஆறு மணிக்கு முன்பாக அன்னார் முழுமையாகக் குணமடைந்தார்கள். அன்றைய தினமே தோராயமாகப் பாதி புத்தகத்தை எழுதி முடித்தார்கள். இறுதியில், 'இதற்காக அல்லாஹ்வுக்கே புகழ் அனைத்தும்' என்று கூறினார்கள்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் பராஹீனே அஹ்மதிய்யா நூலை எழுதியபோது அதை வெளியிடுவதற்கு நிதி உதவி வழங்கியவர்களின் பெயர்களையும் பதிவு செய்ததோடு, அவர்களுக்காக துஆ செய்யுமாறும் கவனமூட்டினார்கள்.** இந்த உதவியாளர்களில் ஐந்து ரூபாய், இரண்டு ரூபாய் - ஏன் இரண்டு அணா வழங்கியவர்களும் இருந்தனர். அன்னார் இந்த அனைத்து உதவியாளர்களுக்கும் நன்றி தெரிவிக்கும்போது, அவர்களின் கொடை உள்ளத்தின் கவனத்தால் மார்க்க நோக்கங்கள் பாழாகாமல் பாதுகாக்கப்பட்டன என்றும், உழைப்புகள் வீணாகாமல் தப்பின என்றும்

கூறினார்கள். மேலும், இந்நூலின் மூலம் பயன்பெறுபவர்கள் அன்னாருக்காகவும் இந்த உதவியாளர்களுக்காகவும் நன்மையை நாடி துஆ செய்ய வேண்டும் என்பதற்காகவே அவர்களின் பெயர்களைப் பதிவு செய்ததாகவும் குறிப்பிட்டார்கள்.

**ஹஸ்ரத் மியா(ன்) மன்சூர் முஹம்மது சாஹிப் அவர்களைப் பற்றிக் குறிப்பிடும்போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள், அவரது நகல் எழுதும் (Copywriting) சேவையையும் தூய எண்ணத்தையும் பாராட்டி நன்றி தெரிவித்தார்கள்.** "அவர் உலக ஆதாயத்திற்காகப் பணியாற்றாமல் மார்க்கத்தின் மீதான அன்பினால் மட்டுமே பணியாற்றுகிறார் என்றும், தமது அர்ப்பணிப்பான உழைப்பினால் சேவையாற்றுகிறார்" என்றும் கூறினார்கள். இத்தகைய தூய மனப்பான்மை கொண்ட உதவியாளர்களை அல்லாஹ்வின் அருட்கொடை என்று அன்னார் குறிப்பிட்டதுடன், அவர்களின் தொண்டுகள் தமது மார்க்கப் பணிகளை நிறைவேற்றுவதற்கு பெரும் துணையாக இருந்தன என்றும் குறிப்பிட்டார்கள்.

**ஹஸ்ரத் ஷேக் யஃகூப் அலீ சாஹிப் இர்ஃபானி அவர்கள் கூறுகிறார்கள்**: "ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தொண்டர்களின் மிகச்சிறிய பணியையும்கூட மதித்து, அவர்களை உற்சாகப்படுத்துவார்கள். ஏதேனும் ஒரு நூலையோ அல்லது சிறு இதழையோ விரைவாக வெளியிட வேண்டி இரவிலும் பணிகள் நடைபெறும்போது, அச்சகப் பணியாளர்களுக்குப் பாலும் ஏனைய பொருட்களும் சிறப்புடன் கிடைக்குமாறு ஏற்பாடு செய்வார்கள். அவர்களுக்கு வழக்கமான ஊதியத்தை விட அதிகமாக வழங்குவார்கள். மேலும், அவர்களின் வேலைத்திறனைக் கண்டு மகிழ்ச்சியையும் நன்றியையும் வெளிப்படுத்துவார்கள்."

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்**: "நபிமார்களின் உள்ளம் மிகுந்த நன்றியுணர்வு கொண்டதாக இருக்கும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் நூல்கள் இரவும் பகலும் அச்சடிக்கப்பட்டபோது அன்னார் பல இரவுகள் உறங்காமல் இருந்துள்ளார்கள். ஆனால், இரவில் யாரேனும் ப்ரூஃப் (Proof) கொண்டுவந்தால், அவரது குரலைக் கேட்டுத் தாமே நேரில் எழுந்து சென்று அந்தப் பிரதியைப் பெற்றுக்கொண்டு, جَزَاكَ اللّٰهُ اَحۡسَنَ الۡجَزَاءِ (அல்லாஹ் உமக்குச் சிறந்த நற்கூலியை வழங்குவானாக) என்று கூறுவார்கள்." அன்னார் அந்தப் பணியாளரின் சிரமத்தை உணர்ந்து, அல்லாஹ் அவருக்குச் சிறந்த நற்கூலியைத் தருவானாக என்று துஆ செய்வார்கள். இதிலிருந்து, மற்றவர்கள் செய்த உதவிகளையும் அவர்கள் அனுபவிக்கும் கஷ்டங்களையும் நபிமார்கள் மிகவும் உணர்ந்தவர்களாக இருந்தார்கள் என்பதை புரிய முடிகிறது.

**ஹாஃபிஸ் நபி பக்ஷ் சாஹிப் அவர்கள் கூறுகிறார்கள்**: "ஒருமுறை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தோட்டத்தில் உலாவிக்கொண்டிருந்தார்கள். அன்னாருடைய கையில் பிரம்பினால் ஆன கைத்தடி ஒன்று இருந்தது; அது ஒரு மரத்தில் சிக்கிக்கொண்டது. பல தோழர்கள் அதை இறக்க முயன்றும் அவர்களால் இயலவில்லை. (ஹாஃபிஸ் நபி பக்ஷ் சாஹிப் அவர்கள் கூறுகிறார்கள்:) நான் மரத்தில் ஏறி அந்தத் கைத்தடியை இறக்கிக் கொடுத்தேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இதைக் கண்டு மிகவும் மகிழ்ச்சியடைந்து, நபி பக்ஷ் மரத்தில் ஏறி உடனடியாக அந்த கைத் தடியைக் கீழே இறக்கிப் பெரும் சாதனை புரிந்துவிட்டார் என்று மீண்டும் மீண்டும் பாராட்டினார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் சிறியவர், பெரியவர் என அனைவரிடமும் மரியாதையுடனேயே உரையாடுபவர்களாக இருந்தார்கள்."

**டாக்டர் மீர் முஹம்மது இஸ்மாயீல் சாஹிப் அவர்கள் கூறுகிறார்கள்**: “ஹஸ்ரத் சாஹிப் அவர்களுக்காக யாரேனும் ஒருவர் அன்பளிப்பைக் கொண்டுவந்தால், அன்னார் மிகுந்த நன்றியுணர்வுடன் ஏற்றுக்கொள்வார்கள்; மேலும் வீட்டிலும் அந்த நபரின் தூய அன்பைப் பற்றிப் பேசுவார்கள்.”

**ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் அவர்கள் மற்றொரு சம்பவத்தைக் கூறுகிறார்கள்**: “டாக்டர் கலீஃபா ரஷீதுத்தீன் சாஹிப் அவர்கள் ஆக்ராவிலிருந்து காதியானுக்கு வரும்போதெல்லாம் ஹஸ்ரத் சாஹிப் அவர்களுக்காக குர்மா خرمہ (எனப்படும் ஒருவகை பாதுஷா போன்ற இனிப்பைக்) கொண்டு வருவார்கள். ஒருமுறை ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் காலையிலிருந்து எதுவும் உணவருந்தியிருக்கவில்லை. ஆக்ராவிலிருந்து தமக்காகக் குர்மா கொண்டுவரப்பட்டுள்ளது என்பதை அறிந்ததும் மிகவும் மகிழ்ச்சியடைந்தார்கள்; அதை விரும்பி உண்டு பாராட்டியதுடன் அதில் சிறிதளவு தமக்காக எடுத்து வைக்குமாறும் கூறினார்கள்.”

குர்தாஸ்பூரில் கரம்தீன் வழக்கின் போது நிதி நெருக்கடி ஏற்பட்ட வேளையில், டாக்டர் கலீஃபா ரஷீதுத்தீன் சாஹிப் அவர்கள் தமது வீட்டில் இருந்த பணத்தையெல்லாம் அனுப்பி வைத்ததோடு, பின்னர் கிடைத்த வருமானத்தையும் தொடர்ந்து அனுப்பிக்கொண்டே இருந்தார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் டாக்டர் கலீஃபா ரஷீதுத்தீன் சாஹிப் அவர்களின் தியாகத்தைக் கண்டு, நீங்கள் தியாகத்தின் எல்லைக்கே சென்றுவிட்டீர்கள்; இனி சந்தா கொடுக்க வேண்டிய அவசியமில்லை என்று அவர்களுக்கு கடிதம் எழுதினார்கள்.”

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் கூறும்போது, “முதலில் டாக்டர் கலீஃபா ரஷீதுத்தீன் சாஹிப் அவர்கள் கடமை என்ற முறையில் சந்தா வழங்கி வந்தார்கள். அதன் பிறகு நன்றி செலுத்தும் விதமாக தொடர்ந்து சந்தா வழங்கி வந்தார்கள்” என்று குறிப்பிடுகிறார்கள்.

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்**: “ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் தமது பிள்ளைகளுக்கு வஸிய்யத் சந்தாவிலிருந்து விதிவிலக்கு அளித்திருந்தார்கள். ஆனால் எனக்கு, اَفَلَا اَکُوْنُ عَبْدًا شَکُوْرًا நான் நன்றி செலுத்தும் அடியானாக இருக்க வேண்டாமா? எனும் ஹஸ்ரத் ரசூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் பொன்மொழி நினைவுக்கு வந்தது. எனவே, நான் நன்றி செலுத்தும் விதமாகச் சந்தா செலுத்தத் தொடங்கினேன்; எனது சந்தா வஸிய்யத் செய்தவர்களை விட அதிகமாகியது. பின்னர், اِعْمَلُوْا آلَ دَاوُدَ شُکْرًا தாவூதின் குடும்பத்தாரே! நன்றி செலுத்தும் விதமாகச் செயல்படுங்கள் என்ற இல்ஹாம் எனக்கு நினைவுக்கு வந்தது. எனவே, நான் நன்றி செலுத்தும் விதமாக மிக அதிகமாக சந்தா கொடுத்து வந்தேன்.”

ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களின் உயிலின்படி, இந்த விதிவிலக்கு அன்னாருடைய ஐந்து பிள்ளைகளுக்கு மட்டுமே உரியதாக இருந்தது. அப்பிள்ளைகளின் சந்ததியினருக்கோ, ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களின் மகன்களின் மனைவிகளுக்கோ, அல்லது மகள்களின் கணவர்களுக்கோ உரியதாக இருக்கவில்லை. எவர் வஸிய்யத் செய்வாரோ அவர் வஸிய்யத் சந்தாவையும் சொத்தின் பங்கையும் கொடுத்தாக வேண்டும். பெஹிஷ்தி மக்பராவில் அடக்கம் செய்வதற்கான அனுமதியும் அந்த ஐந்து பிள்ளைகளுக்கு மட்டுமே உரியதாக இருந்தது. எவ்வாறிருப்பினும், ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களின் பிள்ளைகளும் எவ்வளவோ தியாகங்களைச் செய்துள்ளனர். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது

(ரலி) அவர்களுக்குப் பிறகு வந்த எந்தவொரு கலீஃபாவுக்கோ அல்லது அக்குடும்பத்தைச் சேர்ந்த எவருக்குமே விதிவிலக்கு இருந்ததில்லை; அனைவரும் வஸிய்யத் செய்து, சந்தா வழங்கி, ஏனைய திட்டங்களிலும் தமது வசதி வாய்ப்புக்கேற்பப் பங்கெடுத்துள்ளார்கள். இந்த விதிவிலக்கு அந்த ஐந்து பிள்ளைகளுக்கு மட்டுமே உரியதாக இருந்தது; சில இடங்களிலிருந்து எனக்கு இந்த கேள்வி வந்திருந்ததால் இந்த விளக்கத்தை நான் கொடுக்கிறேன்.

**ஹஸ்ரத் மியா(ன்) ஸத்ருத்தீன் சாஹிப் அவர்கள் கூறுகிறார்கள்**: "ஒருமுறை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் சிராஃக் چراغ எனும் ஊழியரிடம் ஒரு பைசாவைக் கொடுத்து எள்ளு மிட்டாய் வாங்கி வரச் சொன்னார்கள். எள்ளு மிட்டாய் வந்ததும் அன்னார் அதை இரண்டு பங்குகளாகப் பிரித்து, ஒரு பங்கை அவருக்குக் கொடுக்கத் தொடங்கினார்கள். அவர் அதைப் பெற மறுத்தபோது, பைசா என்னுடையதுதான்! ஆனால் உமது உழைப்பு இதில் அடங்கியுள்ளது; நீர் தான் சென்று வாங்கி வந்தீர்; எனவே பாதி பங்கு உமக்குரியது என்று கூறினார்கள்."

இதுவும் பிறரின் உழைப்பை மதித்து நன்றி செலுத்தும் ஒரு முறையாகும்.

ஒருமுறை படாலாவில் நண்பர்கள் தேநீருக்கான ஏற்பாடு செய்திருந்தார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தேநீர் உபசரிப்பு அளித்தவர்களைப் பற்றிக் கேட்டறிந்து, அவர்களின் தொண்டுக்கு நன்றி தெரிவித்தார்கள். பின்னர் செய்தித்தாளிலும் அந்த மக்களின் தொண்டை அறிவித்து நன்றி கூறினார்கள். இதிலிருந்து, ஒருவர் செய்த மிகச்சிறிய உதவியைக் கூட அலட்சியப்படுத்தாமல் அதை மதித்து அவருக்கு நன்றி செலுத்துபவர்களாக அன்னார் இருந்தார்கள் என்பதை அறிய முடிகிறது.

அல்லாஹ் நமக்கும் நன்றியுணர்வின் இத்தகைய மேலான தரங்களை மேற்கொள்வதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக!

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهُ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِىَ لَهٗ وَنَشْهَدُ أَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِى الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْىِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி A.P.A. தாரிக் அஹமது)